பிரதம செயலாளர் செயலகம், வடமாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

187, ஆடியபாதம்வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
187, ආඩියපාදම්පාර, තිරුනෙල්වෙලි, යාපනය.
187, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/FRM/CIR/2014 திகதி: 20.11.2014

மாகாண நிதிச் சுற்றுநிருப இல:- PF/15/2014

மாகாணச் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

2015 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குதல்

பொது நிர்வாக அமைச்சின் 24/2014ம் இலக்க2014/11/12ம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைவாக வடக்கு மாகாண பொதுச் சேவையிலுள்ள அலுவலர்களிற்கு இடைக்காலக் கொடுப்பனவு ரூபா 3,000/= ஐ மாதாந்தம் 2014ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து பின்வருவனவற்றை கவனத்தில் கொண்டு கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்.

1.1 பொது நிர்வாக அமைச்சின் 06/2006ம் இலக்க 2006/04/25ம் திகதிய சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்றுச் சேவை வகுதியினரின் ஆரம்பச் சம்பளத்தை விட குறைந்த ஆரம்ப சம்பளப் படிமுறையினைக் கொண்ட மாதாந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களிற்கு 2015/06/30ம் திகதி வரைக்கும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

1.2 பொது நிர்வாக அமைச்சின் 06/2006ம் இலக்க 2006/04/25ம் திகதிய சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்றுச் சேவை வகுதியினரின் ஆரம்பச் சம்பளத்தை விட குறையாத ஆரம்பசம்பளப் படிமுறையினைக் கொண்ட மாதாந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களிற்கு 2015/08/31ம் திகதி வரைக்கும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

2. தற்காலிக மற்றும் அமைய அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களிற்கும் இச் சுற்றுநிருபம் ஏற்புடையதாகும். மேலே 1ம் பந்தியில் குறிப்பிட்டவாறு ஏற்புடையதாகும் முறையைப் பொறுத்து இடைக்காலக் கொடுப்பனவு செலுத்துதல் அவசியமாகும். அமைய அடிப்படையில் நாட்சம்பளம் பெறும் அலுவலர்களிற்கு சேவையாற்றிய நாளொன்றிற்கு ரூபா.100/= ஆக இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும்.

3. தொழில் பயிலுநர் மற்றும் பயிலுநர்களிற்கு 06/2006(ii)ம் இலக்க 2006/11/10ம் திகதிய பொதுநிர்வாக சுற்றிக்கையின் 14வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளிற்கு மேலே 1ம் பந்தியில் குறிப்பிட்டவாறு கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்.

பிரதிபிரதமசெயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 222 0843 (Dir), 021 222 0840 (Gen); Fax : 021 222 0841; e-mail : ppas.np@gmail.com
நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir), 021 222 0854 (Gen); Fax : 021 222 0853; e-mail : nptreasury@gmail.com
திட்டமிடல் / ක්‍රමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 (Dir), 021 223 0451 (Gen); Fax : 021 223 0354; e-mail : npplan@sltnet.lk
ஆளணிப்பயிற்சி / පිරිස් පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir), 021 739 1254 (Gen); Fax : 021 739 1257; e-mail : npmdti@gmail.com
பிரதமஉள்ளககணக்காய்வாளர் / ප්‍රධාන අභ්‍යන්තර විගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir), 021 222 9528 (Gen); Fax : 021 222 0796; e-mail : npcaudit@yahoo.com

4. கௌரவ ஆளுநர் மற்றும் கௌரவ முதலமைச்சர் மற்றும் கௌரவ மாகாண அமைச்சர்களது அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட ஊழியர் பதவியணியினரிற்கும், பிரதம செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளரிற்கும் மேலே 1ம் பந்தியில் குறிப்பிட்டவாறு கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்.

5. இக் கொடுப்பனவு அரச அலுவலர்களிற்கு தற்போது செலுத்தப்படும் சம்பளம், ஏனைய கொடுப்பனவுகளிற்கு மேலதிகமான இடைக்காலக் கொடுப்பனவாக செலுத்தப்படும்.

மேலும் மேற்படி விடயம் தொடர்பான ஏனைய ஏற்பாடுகள் தொடர்பில் பொதுநிர்வாக அமைச்சின் 24/2014ம் இலக்க சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா – கௌரவ ஆளுநர் அவர்களிற்கு அறியத் தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா – தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா – தகவலுக்காக

සිංහල පරිවර්තනය

දිනය : 20.11.2014

පළාත්මුදල්චක්‍රලේඛ අංක :- PF/15/2014

පළාත් ලේකම්වරුන්

නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්වරුන්

දෙපාර්තමේන්තු ප්‍රධානීන්

උතුරු පළාත.

## 2015 සඳහා ඉදිරිපත් කරන ලද අයවැය සැළැස්ම යටතේ රජයේ සේවකයන්ට අන්තර්කාලීන දීමනා ලබාදීම

රාජ්‍ය පරිපාලන අමාත්‍යාංශයේ 24/2014 හා 2014.11.12 වැනි දින දරණ චක්‍රලේඛය ප්‍රකාර උතුරු පළාත් රාජ්‍ය සේවයේ නියුතු සේවකයන් සඳහා රුපියල් 3000/- ක අන්තර්කාලීන දීමනාව මාසිකව 2014 වර්ෂයේ නොවැම්බර් මස සිට පහත සඳහන් කරුණු සැළකිල්ලට ගෙන ගෙවීම් කටයුතු කළ යුතුයි.

1.1 රාජ්‍ය පරිපාලන 06/2006 හා 2006.04.25 දිනදරණ චක්‍රලේඛයේ සඳහන් විධායක සේවා ගණයට අයත් නිලධාරීන්ගේ මුල් වැටුපට වඩා අඩු මුල් වැටුප් පියවරක් සහිත මාසික වැටුප් තලයක් හිමි නිලධාරීන්ට 2015.06.30 දක්වා ගෙවීම් කළ යුතුයි.

1.2 රාජ්‍ය පරිපාලන 06/2006 හා 2006.04.25 දිනදරණ චක්‍රලේඛයේ සඳහන් විධායක සේවා ගණයේ නිලධාරින්ගේ මුල් වැටුපට වඩා නොඅඩු මුල් වැටුපක් සහිත මාසික වැටුප් තලයක් හිමි තනතුරු දරණ නිලධාරීන්ට 2015.08.31 දක්වාත් ගෙවීම් කළ යුතුයි.

3. තාවකාලිකව හා අනියම් පදනම මත පත් කර ඇති සේවකයින්ට ද මෙම චක්‍රලේඛය අදාළවේ ඉහත 1 වැනි වගන්තියේ සඳහන් පරිදි අදාළ වන ක්‍රමය මත අන්තර්කාලීන දීමනාව ගෙවිය යුතුයි අනියම් පදනම මත දෛනික වැටුප් ලබන සේවකයන්ට සේවය කරන එක්දිනකට රුපියල් 100/= ක අන්තර්කාලීන දීමනාවක් ගෙවිය යුතුයි

4. ඊංකියා පුහුණු හා අභ්‍යාසලාභීන්ට 06/2006(ii) හා 2006.11.10 වන දිනදරණ රාජ්‍ය පරිපාලන චක්‍රලේඛයේ 14 වන ඡේදයේ සඳහන් තනතුරු සඳහා ඉහත 1 වන වගන්තියේ සඳහන් පරිදි ගෙවීම් කළ යුතුයි

5. ගරු ආණ්ඩුකාරතුමන් හා ගරු ප්‍රධාන අමාත්‍ය, ගරු පළාත් අමාත්‍යවරුන්ගේ අනුමත පුද්ගලික සේවක මණ්ඩලයේ තනතුරු දරණ හා ප්‍රධාන ලේකම්ගේ සම්බන්ධීකරණ ලේකම්වද ඉහත 1 වන වගන්තිය ප්‍රකාර අන්තර්කාලීන දීමනා ගෙවීම් කළ යුතුයි

6. මෙම දීමනාව දැනට රජයේ සේවකයින්ට වත්මන්හි ගෙවනු ලබන වැටුප් හා අනෙකුත් දීමනාවන්ට අමතරව අන්තර්කාලීන දීමනාවක් වශයෙන් ගෙවනු ලැබේ.

තවද ඉහත කරුණු සම්බන්ධයෙන් අනෙක් කටයුතු රාජ්‍ය පරිපාලන අමාත්‍යාංශ චක්‍රලේඛ අංකය 24/2014 කෙරෙහි ඔබගේ අවධානය යොමු කරවනු කැමැත්තෙමි.

ආර්. විජයලඩසුම්
ප්‍රධාන ලේකම්

පිටපත් :

1. ගරු ආණ්ඩුකාරතුන්ගේ ලේකම් - උ.ප. - ගරු ආණ්ඩුකාරතුමන්ගේ වෙත දැන්වීම සඳහා
2. සහකාර විගණකාධිපති ජනරාල් - උ.ප. } දැන ගැනීම සඳහා
3. ප්‍රධාන අභ්‍යන්තර විගණකාධිපති - උ.ප. }